அரியசந்தர்ப்பம்!
01 — 11 — 93 தொடக்கம்
12 — 11 — 93 வரை
மலிவு விற்பனை
சோபனா
ஆடை அகம்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.



Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரீகம்!!
ஆதிக்க ஆடைகளில்
சோபிக்க சோபனா
சோபனா
ஆடை அகம்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 21 திங்கட்கிழமை (06 – 12 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 10

# யாழ். நகரக் கரையோரப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு! 17பேர் பலி!!

## கண்மூடித்தனமான தாக்குதலில் 60பேர் காயம்; உடைமை சேதம்

யாழ்ப்பாணம். டிசம்பர் 6

யாழ். நகரக் கரையோரப் பகுதிகளில் மூன்று இடங்களில் நேற்றுக் காலை ஸ்ரீலங்கா விமானப்படையினரின் பொம்மர்கள் நடத்திய கண்மூடித்தனமான குண்டு வீச்சில் குழந்தைகள் நிறைமாதக் கர்ப்பிணி ஒருவர் உட்பட 17 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர்; அறுபது பேர்வரை படுகாயமடைந்தனர், வீடுகள், கடைகள் உட்பட பெறுமதி மிக்க உடைமைகள் நாசமாகின.

உயிரிழந்தவர்களில் பலரின் உடல்கள் விமானக் குண்டு வீச்சில் சிதறிப் போயின.

நேற்றுக் காலை 9 மணியளவில் வந்த இரு பொம்மர்கள் குருநகர்ப் பகுதியில் இரண்டு குண்டுகளை வீசிச் சென்றன.

முதல் குண்டு சின்னக் கடைப் பகுதியில் — ஏற்கனவே விமானக் குண்டு வீச்சில் சேதமுற்ற சென்.ஜேம்ஸ் தேவாலயத்துக்கு பின்புறத்தில் — விழுந்து வெடித்தது.

(3ஆம் பக்கம் பார்க்க)

## சின்னக்கடை: 8பேர் மரணம்

நேற்றைய குண்டு வீச்சில் குருநகர் சின்னக்கடையில் பலியான எண்மரின் விவரம் வருமாறு:-

★ ஸ்ரனிஸ்லஸ் பிரகாசிஅம்மா (வயது 51) — சின்னக் கடையில் மீன் வியாபாரம் செய்பவர்.

★ செல்வராணி பற்றிக் அந்தோனியாப்பிள்ளை (வயது 42) — சின்னக்கடையில் மீன் வியாபாரம் செய்பவர்.

★ கிறிஸ்தோபர் சுவக்கீன் தோமஸ் (வயது 67) — பேக்கரிகாசாளர்.

★ கந்தையா விக்னேஸ்வரன் (வயது 45) — வேலணையில் இருந்து இடம் பெயர்ந்து சின்னக்கடையில் தேநீர்க் கடை வைத்திருந்தவர். நல்லூர் முருகேசு ஒழுங்கையைச் சேர்ந்தவர்.

★ யோகராசா றோஸ்மலர் (வயது 48) — குருநகரைச் சேர்ந்தவர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

★ வேலுப்பிள்ளை நாகராசா (வயது 47) — வட்டுக் கோட்டையைச் சேர்ந்தவர். குருநகரில் கடை வைத்திருப்பவர்.

★ மரிசால் சிந்தாந்துறை (வயது 35) — நாவாந்துறையைச் சேர்ந்த வியாபாரி.

★ அன்ரன் சார்ள்ஸ் (வயது 34) — தேசிக்காய் வியாபாரி. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார்.

## பற்றிக்ஸ் வீதி: 6பேர் பலி

சென். பற்றிக்ஸ் வீதியில் இடம் பெற்ற குண்டு வீச்சில் ஒரே வீட்டில் தாய் மற்றும் இரு பிள்ளைகள் உட்பட நாலு பேரும், மற்றும் இரு சிறுவருமாக அறுவர் உயிரிழந்தனர். அவர்களின் விவரம் வருமாறு:-

★ எஸ்பீரியல் மேரி பொலின் (வயது 30) — தாயார்
★ எஸ்பீரியல் நிரோஜன் (வயது 5) — மகன்
★ எஸ்பீரியல் ஜெரினா (ஒன்றரை வயது) — மகள்
★ மேற்படி வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த அருகில் உள்ள வீட்டுக்காரச் சிறுவனான சிறில் அகஸ்ரீன் சாந்தன் (வயது 10)
★ பாக்கியநாதன் மயூரன் (வயது 12)
★ ரவி ரயன்ஸி (வயது 3)

## பாஷையூர்: 2பேர் உயிரிழப்பு

பாஷையூரில் இடம்பெற்ற குண்டுவீச்சில் உயிரிழந்த இருவரின் விவரம் வருமாறு:-

★ சியோமா றொசாறி (வயது 43) — பாஷையூரைச் சேர்ந்தவர். இவரின் கணவரும் குண்டுவீச்சில் படுகாயமுற்று ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

★ இராசரத்தினம் மான் விக்டர் கிருபைரத்தினம் மான் (வயது 65) — உடுவிலைச் சேர்ந்த இவர் பாஷையூரில் வசித்து வந்தார். இவரது மனைவியும் குண்டுவீச்சில் காயமுற்றார்.

## அரச பயங்கரவாதம்; காடைத்தனமான செயல்

### குண்டுவீச்சு குறித்து குரு முதல்வர்

யாழ்ப்பாணம், டிச. 6

போருக்கு நேரடியாக முகம் கொடுக்க முடியாத நிலையில், அரச பயங்கரவாதம் அப்பாவி மக்கள் மீதும் வணக்க ஸ்தலங்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அரச படைகளின் மிகவும் கீழ்த்தரமான காடைத்தனமான செயல் இது.

யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க குருமுதல்வர் அருட்திரு இம்மானுவேல் அடிகளார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். நகர கரையோரப் பகுதிகள் மீது ஸ்ரீலங்கா விமானப் படையினர் நேற்று நடத்திய குண்டு வீச்சுத் தொடர்பாக ''புலிகளின் குரல்'' வானொலிக்கு கருத்துக் கூறுகையில் அவர் முன் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பாஷையூர் குருத்துவக் கல்லூரியை நோக்கி நடத்தப்பட்ட குண்டு வீச்சை தாமும் மற்றும் அதி வண. ஆயர் அம்பலவாணர், அருட்திரு ஜெபநேசன் அடிகள் உட்பட மற்றும் பலரும் புனித யுவானியார் ஆலய முன்றிலில் நின்றவாறு நேரில் பார்த்ததாகவும் —

பின்னர் குண்டுத் தாக்குதல் நடந்த இடத்தை சென்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மௌனப் பேரணிக்கு பழிவாங்கும் செயல் இது

### குருநகர் பங்குத்தந்தை கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிச. 6

சென். ஜேம்ஸ் தேவாலயம் மீதான தாக்குதல் உட்பட கண்மூடித்தனமான குண்டு வீச்சு தாக்குதல்களைக் கண்டித்து அகிம்சையான வழியில் நடத்தப்பட்ட மௌனப் பேரணிக்குப் பழிவாங்கும் நோக்கிலேயே நேற்றைய விமானக் குண்டு வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

—குருநகர் பங்குத் தந்தை அருட்திரு ஆர். எம். ஜி. நேசநாயகம் நேற்றைய மூர்க்கத்தனமான குண்டுவீச்சு குறித்து இவ்வாறு கூறியுள்ளார்.

—மீண்டும் சென். ஜேம்ஸ் தேவாலயத்துக்குச் சமீபமாக குண்டுவீச்சு நேற்று நடத்தப்பட்டுள்ளது. இதனால் தேவாலய சொரூபம் சேதமடைந்துள்ளது. இத்தாக்குதலை தவறுதலாக நடத்தப்பட்டது என எவரும் கூறமுடியாது. ஏனெனில் ஹெலிக்கொப்டரின் வழிகாட்டலுடனேயே குண்டு வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

அகிம்சை வழியில் எதிர்ப்பைத் தெரிவிக்க ஆயிரக்கணக்கான மக்கள் எதுவித பேதங்களும் இன்றி மௌன ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இத்தகைய தாக்குதல்களை வெளி உலகிற்குத் தெரியப்படுத்த முயற்சி செய்யவுள்ளோம். —இவ்வாறு அவர் புலிகளின் குரல் வானொலிக்கு தெரிவித்துள்ளார்.

(ஓ-5)

## 93 படையினர் சடலங்களை குழிகள் வெட்டி புதைத்தோம்

### பூநகரியில் தப்பிய சிப்பாய் தகவல்

கொழும்பு, டிச. 6

''பூநகரியில் நாம் ஆறு பேர் இறுதி மரியாதை வழங்க 58 படையினரின் சடலங்களை புதைகுழியில் வைத்து மூடினோம். பின்னர் இரண்டாவது தடவையாக மேலும் 35 படையினரின் சடலங்களை அடக்கம் செய்தோம்.''

பூநகரியில் உயிர் தப்பிய கஜபா ரெஜிமெண்டின் சிப்பாய் எச். எம். ஜயந்தகுமார ஹேரத் இவ்வாறு தெரிவித்தார் என 'சண்டே ஐலண்டில்' தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட கஜபா ரெஜிமெண்டின் மூன்றாவது பட்டாலியனின் பதில் தளபதி மேஜர் எச். எல். ஹேமபால, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஹமில்டன் வனசிங்காவின் மருகரான கப்டன் பந்துகா வனசிங்கா மற்றும் 58 படையினரின் உடல்களே பூநகரியிலேயே அடக்கம் செய்யப்பட்டன.

''கடும் மழை, விடுதலைப் புலிகளின் ஷெல், மோட்டர் மற்றும் சிறு ரக ஆயுதத் தாக்குதல்களின் மத்தியில் மண்வெட்டிகள் மற்றும் கிடைத்த கருவிகளைக் கொண்டு புதைகுழிகளை நாம் வெட்டினோம்.

பின்னர் சடலங்களை அங்கு புதைத்து விட்டோம் என்றும் அந்தச் சிப்பாய் மேலும் தெரிவித்தார். (ஓ எ)

## ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு வெறும் பகற் கனவு!

# தளபதியை மாற்றுவதால் பிரச்சினை தீர்ந்து விடுமா?

### பி. பி. ஸி. கேள்வி

லண்டன், டிச 6

இலங்கையில் இனப் பிரச்சினை இல்லை என்று ஜனாதிபதி கூறிவருகிறார்.

''பேசுவதற்கு ஒன்றுமில்லை'' படையினர் முழு மூச்சுடன் இறங்கி விடுதலைப் புலிகளை முறியடிக்க வேண்டும்'' என்ற கருத்தையே ஜனாதிபதியின் பேச்சு கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

இது இலங்கை ஜனாதிபதியின் பகற் கனவாக இருக்கலாம்.

— இவ்வாறு பி. பி. ஸி. குறிப்பிட்டிருக்கிறது.

தளபதியை மாற்றுவதால் பிரச்சினை தீர்ந்து விடுமா என்றும் பி. பி. ஸி. கேள்வி எழுப்பியது.

''இலங்கை இராணுவத்தின் நிலை'' — என்ற தலைப்பில் பி.பி.ஸி. செய்தியாளர் சியாகோ நாஸ் அனுப்பிய கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இராணுவத் தலைமைப் பீடத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை படையில் உள்ள பலர் வரவேற்றுள்ளனர்.

ஆனால் அவர்களே இப்போரில் இராணுவம் மேலும் பெரும் பிரச்சினைகள் பலவற்றை எதிர்நோக்குகிறது என்று கூறுகின்றனர்.

சிசில் ஓய்வு பெறுவது இராணுவத்துக்குள் இருந்துவரும் உட்பூசல்கள், கசப்புணர்வுகள் ஆகியவற்றை நீக்கக் கூடும். சிசிலுக்கும் அவரின் அதிகாரிகளுக்கும் இடையே ஏற்பட்ட பூசல்கள் பெரும் செய்திகளாக வெளிவந்தன.

இவற்றின் விளைவாக சில அதிகாரிகள் ஓய்வுக் காலத்துக்கு முன்பதாகவே பதவியில் இருந்து ஓய்வு பெற்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



'தலை'பதியை மாற்றுவதாலை தலையிடி எப்படி தீரும் பாருங்கோ...!

## தடுப்பு முகாமிலிருந்து வந்தவர் கூறுகிறார்:

# புலிகள் பலாலிக்குள் நுழைந்து மீண்டும் தாக்கலாம் என அச்சம்

யாழ்ப்பாணம், டிச. 6

பலாலி இராணுவ முகாம் தலைமையகத்தின் முன்பாக உள்ள பயிர்ச் செய்கைப் பிரிவுக்குள் புகுந்து விடுதலைப் புலிகள் தாக்கியதன் பின்னர், அங்குள்ள படைச் சிப்பாய்கள் பய பீதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பலாலி முகாம் மீது விடுதலைப் புலிகள் மீண்டும் தாக்குதல் நடத்தலாம் என்று அஞ்சியவாறே அவர்கள் பொழுதைக் கழிக்கின்றனர்.

பலாலி தடுப்பு முகாமிலிருந்து விடுதலையாகி, கப்பல் மூலம் நேற்றுப் பருத்தித்துறை வந்தடைந்தவர்களில் ஒருவர் [illegible] இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பூநகரித் தாக்குதலின் பின்னர் பலாலி இராணுவ முகாமையும் விடுதலைப் புலிகள் தாக்கலாம் என்ற பயப் பிராந்தியத்துடன் இருந்தனர்.

விடுதலைப் புலிகள் அங்கு ஊடுருவித் தாக்கிய பின்னர் சிப்பாய்கள் மேலும் அச்சமடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் அண்மையில் பலாலி இராணுவத் தலைமையகத்தின் முன்பாக உள்ள இராணுவ பயிர்ச் செய்கைப் பிரிவின் உள்ளே

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், டிச. 6

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்றும், நாளையும், நாளை மறுதினமும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ)

## காயமுற்ற 56 பேர் விவரம்

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ்ப்பாணத்தில் நேற்று சின்னக்கடை, சென். பற்றிக்ஸ் பகுதி, பாஷையூர் ஆகிய இடங்களில் விமானப்படையினர் நடத்திய குண்டுவீச்சுக்களில் சுமார் அறுபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவர்களில் படுகாயமடைந்த 56 பேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் இவர்களில் சுமார் முப்பது பேர் சின்னக்கடை குண்டு வீச்சில் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்களில் சிறுவர்கள், முதியவர்கள் என பலரும் அடங்கியுள்ளனர். இவர்களில் ஒருவருக்கு கால் துண்டிக்கப்பட்டுவிட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் 56 பேரின் விவரம் வருமாறு:-

★ தியாகராஜா திருநாவுக்கரசு (வயது 47) — 2 ஆம் குறுக்குத் தெரு.
★ அவரது மகன் திருநாவுக்கரசு சுகன் (வயது 10)
★ திருக்குடும்பம் தாஸன் (வயது 41) — பீச் றோட்டைச் சேர்ந்தவர்.
★ செபஸ்தியாம்பிள்ளை அனீந்திரன் (வயது 18) — கொட்டடியைச் சேர்ந்தவர்.
★ யோசெப் ஜோன் (வயது 75) — சின்னக்கடையைச் சேர்ந்தவர்.
★ கதிரவேல் ராஜசேகரம் (வயது 32) — சின்னக்கடையைச் சேர்ந்தவர்.
★ ஜோயிஸ் குயின்ரன் கிறிஸ்துராஜா (வயது 33) —

(3 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ராணுவத் தளபதியாக ஜெரி சில்வா நியமனமாவார்?

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன பதவி விலகினால் —

தற்போது இராணுவத் தலைமை நிர்வாக அதிகாரியாக உள்ள மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா, புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்படுவார்.

புதிய இராணுவத் தலைமை நிர்வாக அதிகாரியாக —

தற்போது கிழக்குப் பிராந்தியத் தளபதியாக கடமை ஆற்றிவரும் மேஜர் ஜெனரல் லக்கி அல்கம நியமிக்கப்படுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

''இராணுவத் தளபதி சிசில் பதவி விலகுவார் என்ற செய்தியை அரசு இனித்தான் உறுதிப்படுத்த வேண்டும்.

''விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பல பின்னடைவுகளை இராணுவம் சந்தித்ததைத் தொடர்ந்து தளபதி சிசில் இம்மாதம் பிற்பகுதியில் ஓய்வு பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிசிலின் பதவிவிலகல் படையினரின் பிரச்சினைகளைத் தீர்க்குமா என்பதும் சந்தேகம் தான்'' — இவ்வாறு பி.பி.ஸி. குறிப்பிட்டது. (உ-எ)

# புலிகளுடன் இனி பேச்சு இல்லை!

### பிரதமர் ரணில் அறிவிப்பு

புதுடில்லி, டிச. 6

விடுதலைப் புலிகள் போராளிகளுடன் எதிர் காலத்தில் பேச்சு நடத்தப்பட மாட்டாது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு தெரிவித்து விட்டதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

பத்து ஆண்டுகளாக நடக்கும் உள்நாட்டுப் போரை ஜனநாயக ரீதியில் முடிவுக்குக் கொண்டுவர தமது அரசு செய்துவரும் முயற்சிகள் பயனளிக்கவில்லை என 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் தெரிவித்துள்ளதாக அந்த வானொலி மேலும் தெரிவித்தது. (உ-5)

## தஞ்சாவூர் காடுகளில் புலிகள் ஊடுருவல்

### பாலசுப்பிரமணியம் குற்றச்சாட்டு

தஞ்சாவூருக்கு அருகே முத்துப்பேட்டை காடுகளில் விடுதலைப் புலிகள் அதிக அளவில் ஊடுருவி டீசல் பெற்றோல் உட்பட பல அத்தியாவசியப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்குக் கடத்திச் செல்கின்றனர்.

தமிழ்நாடு சட்டசபை எதிர்க் கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் செய்தியாளர்களிடம் நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

மத்திய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தடை விதித்த போதிலும் ஆளும் அ. தி. மு. க. அரசு இந்த நடவடிக்கைகள் குறித்து அதிக அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-எ-த)

## பலாலி முகாமில் இருந்து 16 பேர் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், டிச. 6

முப்பது மாதங்களுக்கு மேல் பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று காங்கேசன் துறையிலிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைந்தனர்.

மேலும் 14 பேர் பலாலியில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் கிளாலி கடற்பரப்பில் கைதானோர், கல்முனைப் பகுதியில் மீன் பிடிக்கச் சென்று கைதானோர். இந்தியாவில் இருந்து வரும் பொழுது கைதானோர் மற்றும் காரைநகர் பிரஜைகள் குழு தலைவர் அவரது உறவினர் ஒருவர் ஆகியோர் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-9-173)

## ஜி. சீ. ஈ பரீட்சை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 6

ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது. இந்தப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்று ஆரம்பமாகும் இந்தப் பரீட்சையில் நாடு முழுவதிலும் 5 லட்சத்து 38 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர் என பரீட்சை இணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ-5-3-162)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### மனைப்பொருளியல்

ஆண்டு 9, மாணவர்களுக்குப் பயன் தரும் மனைப் பொருளியல் வினா - விடை வெளிவந்து விட்டது. பரீட்சையில் அதிசிறப்புச் சித்தி பெற உதவும் நூல். பூபால சிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(28237)

### வெளிவந்துவிட்டது!

இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம் எழுதிய தமிழ் இலக்கணம் வினா-விடை (ஆண்டு- 9, 10, 11) வெளிவந்து விட்டது. பரீட்சைகளில் அதி சிறப்புச் சித்திபெற உதவும் அரிய வழிகாட்டி. பூபால சிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (28236)

### காவேரி சீயாக்காய்

காவேரி சீயாக்காய் பவுடர் பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வதுடன் வளமான ஆரோக்கியமான முடி வளரவும், கண் குளிர்மைக்கும் மிகவும் திறமையானது. எல்லோர் நினைவிலும் நிலைத்து நிற்கும் சீயாக்காய் பவுடர் காவேரி தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன்சன்ஸ், ஆடிய பாதம் வீதி, நல்லூர். (28277)

### கைமாறப்பட்டுள்ளது

1-11-93 அன்று வெலிங்டன் சந்தி அருகில் உள்ள விநாயகம்ஸ் இயந்திரம் ஸ்தாபனத்தின் முன்பாக விடப்பட்டிருந்த Lumala (லுமாலா)சைக்கிள் கைமாறப் பட்டுள்ளது. ஆகவே கைமாறப்பட்ட மேற்கூறிய சைக்கிளை கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைத்து தங்களது சைக்கிளை மாற்றம் செய்து செல்லுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டப்படுகின்றீர்கள். தொடர்பு; சுப்பஸோ வீடியோ, 198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6653)

## கிணற்றில் தவறி விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், டிச. 6

விறகு பொறுக்கச் சென்ற சிறுவன் மழை வெள்ளத்தால் நீர் மூடியிருந்த கிணற்றில் தவறி விழுந்து மரணமானான்.

நேற்று முன்தினம் காலை 8மணியளவில் நாவற்குழியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

திருமலையில் இருந்து இடம் பெயர்ந்து நாவற்குழி முகாமில் தங்கியிருந்த கந்தசாமி செல்வம் (வயது 13) என்ற சிறுவனே மரணமானவராவார். (த)

## பணம் பறிக்கும் குழுக்கள்

கொழும்பு, டிச. 6

கொழும்பில் கைது செய்யப்படுபவர்களை விடுவித்துத் தருவதாகக் கூறிப் பொது மக்களிடமிருந்து பணம் பறிக்கும் குழுக்கள் பற்றி விழிப்புடன் இருக்குமாறு கொழும்பு பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு பணம் பறிக்கும் கும்பலைச் சேர்ந்த ஒருவர் பொலீஸாரால் கைது செயப்பட்டிருப்பதாகவும் —

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவரை விடுவித்துத் தருவதாகக் கூறி ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவைப் பெற பிரஸ்தாபநபர் முயற்சித்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

## பயிற்சி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 6

பாலர் கல்வி தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையச் செயலகத்தில் நடைபெறும். மறுநாள் வியாழன் பாலர் கல்வி பற்றிய ஒருநாள் பயிற்சிக் கருத்தரங்கும் அங்கு இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பாலர் கல்வி பிரச்சினைகள், தேவைகள், வளப்பங்கீடு, ஒருங்கிணைந்த செயற்பாடு போன்ற விடயங்கள் பற்றி அந்த ஒருநாள் கருத்தரங்கில் ஆராயப்படவுள்ளது

(த-5)

---

சந்திப்பு

## வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜம்

நாளை 07 - 12 - 1993 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அரசியல்துறை தொழிற்சங்கப் பகுதியினர் கோண்டாவிலில் அமைந்த விடுதலைப் புலிகள் தலைமைச் செயலகத்தில் யாழ். மாவட்ட அனைத்து வர்த்தக சங்க நிர்வாக உறுப்பினர்களையும் ஒன்றுகூடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

நன்றி:

(28271) —செயலாளர்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்: 20 — 10 — 1930



இறைவன் அடியில்: 06 — 11 — 1993

### திருமதி தனபாக்கியம் சபாரத்தினம்

பாசமுடன் எம்மை பாங்குடனே வளர்த்து
பண்பு மிகு தழைத்தோங்க காத்தீரே அம்மா!
ஏற்றமொடு நாமினிது வாழ இப்புவியில் வித்திட்டு
மின்னலென மறைந்தாயே நாமிங்கு கதறியழ அம்மா
நினையாத நேரம் அணையாத ஒளி விளக்கே அம்மா
நேற்று வரை எங்கள் உயிரோடு குடியிருந்து
காணும் இடமெல்லாம்
உம் கருணைமுகம் காட்டிய எம் தாயே!
மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ அம்மா!
எம் இதயம் மீண்டும் வரும்
நினைவலையால் உருகி அழும்
எம் உள்ளம்
எந்நாளும் உங்களையே எண்ணித் தவிக்குதம்மா
இரும்பாக்கி எம் மனதை இறுக நினைத்தாலும்
கரும்பான உம் நினைவுகளே கண்முன்னே நிழலாட
விழி நீரை உம் நினைவுக்காய் நாம் உதிர்வோம்
எந்நாளும் - அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

கணவர்: மா. சபாரத்தினம்.
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். [28272]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### த. புஷ்பராசா (துரையன்)

(பலாலி கடற்றொழில் அபிவிருத்தி சங்கத் தலைவரும், சமூகத் தொண்டரும்)

தாயின் மடியில்: 14—01—1958 ஆண்டவன் அரவணைப்பில்: 06 — 11 — 1993

''சீவியத்திலும் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்.''

பதினொரு வருடங்கள் தலைவராக சங்கத்தில் சேவை புரிந்து பலாலி மக்கள் மனதில் குடிகொண்டீர்! ''சாந்தன்'' விளையாட்டுக் கழகத்தை கட்டி வளர்க்க அயராது உழைத்தீர்! எமது கழகத்துக்கு பல உதவிகள் செய்து தந்தீர்!
எமது கழகத்தை விட்டு எங்குதான் சென்றீரய்யா!
உன்னைப்போல் ஒரு தலைவனை எப்பதான் காண்போம்
மக்களின் சேவை செய்தது காணுமென்று
இறைவன் தன்பக்கம் அழைத்தாரோ!

உன் துயரால் வாடும்;
''சாந்தன்''
விளையாட்டுக் கழக உறுப்பினர்கள்.
பலாலி வடக்கு.

(6666)

---

## முக்கிய அறிவித்தல்

### கம இரசாயன, உர விற்பனையாளர்கள் கவனத்திற்கு

03-12-1993 அன்று நடைபெற்ற சங்கக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானித்தபடி நுகர்வோரின் நன்மை கருதி சகல கம இரசாயன விற்பனையாளர்களும் 10-12-1993க்கு முன்னர் தங்கள் கமஇரசாயன இருப்பு நிலையை இரட்டைப் பிரதியில் சங்கத் தலைவருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மற்றும் தடைசெய்யப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட கமஇரசாயனங்களை விவசாயப் போதனாசிரியரின் சிபார்சுக் கடிதம் பெற்று மட்டும் விற்பனை செய்தல் வேண்டும். சகல கமஇரசாயனங்களும் உற்பத்தியாளர்களால் போத்தலில் குறிப்பிடப்பட்ட விலைக்கே விற்பனை செய்தல் வேண்டும் என்பதும் சகலருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

கம இரசாயன, உர விற்பனையாளர் சங்கம்.
(6734)

---

## தேவை

### மொழிபெயர்ப்பாளர்கள் (ஆங்கிலம் - தமிழ்)

தொழில்நுட்பம், இலக்கியம், அரசியல், திரைப்படமொழி மாற்றம் ஆகிய துறைகளில் அனுபவமுள்ளோர் விண்ணப்பிக்கவும், வீட்டிலிருந்து கொண்டே பணியாற்ற விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.

### அழகியற் பாணி எழுத்தர்கள்

புத்தக முகப்பு அட்டை உருவாக்கத்தில், முன் அனுபவம் உள்ளோர் விண்ணப்பிக்கவும்.

இல 577
C/O உதயன்
யாழ்ப்பாணம்

(28299)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### செல்வி நேசரத்தினம் சுப்பிரமணியம்

தோற்றம்: 17—04—1921 மறைவு: 06 -11—1993

எங்கள் கல்லூரியில் 08 09-1952 — 30-09-1959 வரை ஆசிரியராகவும், 30-09 1959 — 22-01-1969 வரை விசேட பதவி (தரம்-1) வகித்தவரும், 22-01-1969 — 18-04-1980வரை உப அதிபராகவும் கடனமயாற்றி, ஆசிரியர், மாணவர்கள் மனதில் நீங்காத இடம்பெற்று 06-11-1993இல் எம்மையெல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்த செல்வி நேசரத்தினம் சுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ய/மெ பெ. உ. பா.
பழைய மாணவர் சங்கம்.
பருத்தித்துறை.

(சி-6654)

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி சித்திரகலா அமரசேனாதிபதி

அன்னையின் மடியில்: 20 — 07 — 1984
ஆண்டவன் மடியில்: 20 — 11 — 1989
திதி: 06 — 12 — 1993

கண்ணீர் பூக்கள்

பச்சைப் பசுங்கிளியே! பால் வடியும் தேனமுதே!
இச்சையுடன் எம் மடியில் தவழ்ந்தவளே-அச்சமின்றி
இம் மண்ணில் இன்பமுடன் இலங்கி வந்த எழிலுருவே!
வெம்பு தடி நீயில்லா வீடு!

சின்ன வீடு கட்டிச் சிரிக்கும் சித்திராவே! இளவயதில்
அன்னமென ஆடிவந்த அழகுருவே! கன்னலெனும்
தமிழீழம் காண்பதற்குள் தாவி நீ விண் மீது
எமை விட்டுப் பறந்தது ஏன்?

உமது பிரிவால் வாடும்:
ஐயா, அம்மா, ஆசை அண்ணா,
அப்பாச்சி, அம்மாச்சி,
குடும்பத்தினர்.

''சுதா பவனம்'',
பலாலி வடக்கு,
தொண்டமனாறு. (28261)

---

## INTERNAL AUDITOR

Applications are invited for the above post from males with 10 years experience in the field.

Retired persons may also apply with full Bio-Data giving names of 2 non-related refrees. Applications should reach on or before 20 - 12 - 1993.

Manager (Administration),
NEW UTHAYAN PUBLICATIONS,
292/2, Navalar Road,
Jaffna.

(E)

---

மிருசுவில்

## புனித நீக்கொலார் பெருவிழா

அருளாசி பொழிந்து, ஆதரவு தந்து,
அந்தரம் ஆபத்து, அச்சுறுத்தல் மத்தியிலே,
திருவருளை தினமிரந்து, தாபரிக்கும் தவமுனியே!
தீங்கின்றி எம்மவரை, தேற்றிவரும் திவ்வியனே!
பொருதிவரும் போரிடிகள், பொறிகுண்டு எறிகணையில்,
பொல்லாங்கு நேராது எல்லார்க்கும் தயவாகி,
வருவினைகள் நோய்பிணிகள், வருத்தியெமை வாட்டாது
வல்லபனின் திருப்பாதம், வரம்வேண்டி தாருமையா!

கன்னியனே! காவலனே! கற்பகமே! போற்றி
கருத்தெங்கும் வீற்றிருந்து காப்பவனே! போற்றி
தண்ணளியே! தயவொளியே! தவநெறியே! போற்றி
தணியாத பேரின்பம், தந்தளிக்கப் போற்றி
விண்ணொளியே! வித்தகனே! குருத்தலைவா! போற்றி
விளைநிலமும் ஐம்புலனும், ஆதரிக்கப் போற்றி
புண்ணியனே! புனிதமுறு, நீக்கொலாவே! போற்றி
பூங்கரத்தால் நல்லாசி பொழிந்திருக்கப் போற்றி!

அருளாசி வேண்டும் அடியார்கள்,
ஞா. அரியமலர், மிருசுவில்.
06-12-1993. [6823]

---

## யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## ஆண்டிறுதிப் பொதுக்கூட்ட அழைப்பு

**08-12-1993** புதன்கிழமை

காலை:- **8-00 — 9-00**
பட்டப்படிப்புக்களுக்கான
விரிவுரையாளர்கள், நிர்வாகிகள்.

**9-00 — 10-00**
விஞ்ஞானப் பிரிவுக்கான
ஆசிரியர்கள், நிர்வாகிகள்.

**10 00 — 11-00**
கலை வர்த்தகப் பிரிவுக்கான
ஆசிரியர்கள், நிர்வாகிகள்.

**11-00 — 12 00**
க.பொ.த (சா/த)ற்கு உட்பட்ட
வகுப்புகளுக்கான ஆசிரியர்கள்,
நிர்வாகிகள்.

**12 00 — 1-00**
சகல கல்வி நிறுவன
நிர்வாகிகள்.

புதிய ஆண்டுக்கான
### ஒன்றிய யாப்புத் திருத்தம்
செய்யப்படவுள்ளது.

எனவே இது பற்றிய கருத்துக்களை தனித்தனியாக அன்றி நிறுவன ரீதியாக எழுத்து மூலமமாகவோ அல்லது நேரடியாகக் கலந்து கொள்வதனாலோ விவரமாகத் தெரிவிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்.

(சி)6657)

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம்: 20 - 11 - 1935



அஸ்தமனம்: 09 - 12 - 1990

### அமரர் மாரிமுத்து துரைராசா

எங்கள் குடும்ப ஒளி விளக்கே
ஆருயிர்த் தெய்வமே அன்புத் தந்தையே
மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
தங்கள் ஆத்ம சக்தி எங்களை
என்றும் வழி நடத்தும் ஐயா.

மனைவி, பிள்ளைகள், மருமகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

No. 5, 6ஆம் ஒழுங்கை,
பலாலி றோட்,
யாழ்ப்பாணம். (28310)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.


## கொக்கரிப்புக்கு கிடைத்த பரிசு!

ஸ்ரீலங்காவின் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்னா தமது பதவியிலிருந்து விலகப் போவதாகச் செய்திகள் வந்துள்ளன.

ஸ்ரீலங்காப் படைகளின் சரித்திரத்தில், போரில் தோற்றமைக்குப் பொறுப்பேற்று, இராணுவத் தளபதி ஒருவர் பதவி விலக இருப்பது இதுவே முதலாவது தடவையாகும்.

லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்னா கடந்த இரண்டு வருடங்களாக இராணுவத் தளபதியாகப் பதவி வகிக்கிறார். அதனால் கடந்த மூன்றரை வருட கால ஈழப்போரில், அரைவாசிக் காலத்துக்கு மேல் அவரே இராணுவத்துக்குத் தலைமை வகித்து தமிழர்களுக்கு எதிரான போரை நடத்தியிருக்கிறார்.

சிசில் வைத்தியரத்னா சேனாதிபதியாகப் பதவி ஏற்றபோது, வடக்கு-கிழக்கு யுத்தத்தில் விரைவில் வெற்றியீட்டுவார் என்றும், அதனால் போர் முடிவுக்கு வந்துவிடும் என்றும் தென்னிலங்கையர்கள் எதிர்பார்த்தார்கள். 1988, 89ஆம் ஆண்டுகளில் தெற்கில் வெடித்த ஜே. வி. பி. வன்செயல்களை அடக்கிய தீரர் என்றும், அதேபோல விடுதலைப் புலிகளைத் தோற்கடித்துவிடுவார் என்றும் தெற்கின் விமர்சகர்கள் பலரும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆனால் அந்த எதிர்பார்ப்பு, நம்பிக்கை எல்லாவற்றிலும் மண் போட்டது போல, விடுதலைப் புலிகளின் கைகளினால் அடிக்கடியும், அடுத்தடுத்தும் அவர் தோல்விகளை சந்தித்தார். இப்போதும் புலிகளின் பூநகரி வெற்றிக்குப் பதில் சொல்ல முடியாததாலேயே சிசில் பதவி விலக வேண்டி வந்துள்ளது!

பூநகரித் தோல்வியின் அடுத்த நாளே, நவம்பர் 13ஆம் திகதியே சிசில் தமது பதவியை ராஜினாமாச் செய்திருக்கவேண்டும். அவ்வாறு செய்திருந்தால் அது அவரது கனவான் தனத்தை எடுத்துக் காட்டியிருக்கும்.

இப்போது, சிறகொடிந்த பறவையான பின்னர், ஜனாதிபதி விஜேதுங்காவால் அவமானப்படுத்தப்பட்ட பின்னர், திறமையற்றவர் எனக் காட்டப்பட்ட பின்னர் பதவி விலகுவது —

இவர் கடும் போக்காளர், கர்வம் மிக்கவர், தன்னை விஞ்ச எவரும் இல்லை என்ற மமதையும் திமிரும் மிக்கவர் என்ற கணிப்பீடுகளோடு, பதவி ஆசை பிடித்தவர் என்பதனையும் காட்டுகிறது. வடக்கு - கிழக்கு யுத்த நடவடிக்கைகளின் பொறுப்பை மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவிடம் ஜனாதிபதி ஒப்படைத்த பின்னரே தாம் உதைத்துத் தள்ளப்பட்டதை சிசில் உணர்ந்தார் போலும்!

அடுத்த ஒக்டோபரில் இராணுவ தினம் வருவதற்கு முன்னர் விடுதலைப் புலிகளை ஒடுக்கி, யுத்தத்தில் வென்றுவிடப்போவதாக சரித்திரப் பிரசித்தி பெற்ற அனுராதபுரம் மகாபோதிச் சமயச் சடங்கில் சங்கநாதம் முழங்கியவர், தமது சரித்திரம் இல்லாமல் பதவி விலகப் போகிறார். பாவம்!

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வென்றுவிடலாம் என்று நம்பிக்கை — உஷார் — கொடுத்து, ஜனாதிபதியை இராணுவத் தீர்வு மட்டுமே என்ற நிலைக்கு வழிப்படுத்தியவரே சிசில் தான். இப்போது ஜனாதிபதியால் ஓரங்கட்டப்பட்டு பதவி விலக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

தமிழர் பிரச்சினைக்குரிய அரசியல் அணுகுமுறையின் தவறுக்குப் பலிக்கடாவாகும் முதலாவது உயர்தர இராணுவ அதிகாரி சிசில். யுத்தம் அரசியலின் விசாலிப்பு என்பதை உணராமல் கொக்கரிக்கும் ராணுவ அதிகாரிகளுக்கு நல்லதொரு பாடம்; பரிசு!

எல்லாவற்றுக்கும் மேலாக, சிசிலின் பதவி விலகல் விடுதலைப் புலிகளுக்கு இராணுவ ரீதியாகக் கிடைத்த வெற்றிகளை விட, அரசியல் ரீதியாகக் கிடைத்த மாபெரும் வெற்றி! மகத்தான சாதனை!!

## பாவனைக்குதவாத பால்மா; விசாரணைக் குழு நியமனம்

கதிரியக்கத் தாக்கத்துக்குள்ளான, பாவனைக்குதவாத குழந்தைகள் பால்மா கொள்கலன்களில் தருவிக்கப்பட்டது தொடர்பாக ஆராய தனிநபர் விசாரணைக் குழு அமைக்கப்படும்.

விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சர் தர்மதாஸ பண்டா இவ்வாறு நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

விசாரணைக் குழுவின் அறிக்கைக்கு அமைய பால்மாவைத் தருவித்த நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

குழந்தைகளுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய பால்மா தருவிக்கப்பட்டமை தொடர்பாக ஆராய ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார முன்னதாக கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தார். (த)

## 10 கொள்கலன்களில் வந்த

## குழந்தைகள் பால்மாவில் கதிரியக்கத் தாக்கம்!

பத்து கொள்கலன்களில் கப்பலில் கொண்டு வரப்பட்டு கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்ட குழந்தைகளுக்கான பால்மாவில் கதிரியக்கத் தாக்கம் அளவுக்கு அதிகமாக கலந்திருப்பதை அணுசக்தி அதிகாரசபை அதிகாரிகள் கண்டுபிடித்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் முற்பகுதியில் துறைமுகம் வந்தடைந்த இப்பால்மா முழுவதும் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன. இவற்றின் பெறுமதி 98 லட்சம் ரூபாவாகும்.

நாட்டுக்குள் கப்பல் மூலம் கொண்டு வரப்படும் எல்லா உணவுப்பொருள்களையும் கதிரியக்கப் பரிசோதனைக்கு உட்படுத்தும்படி தாம் தமது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக சுங்கப் பணிப்பாளர் திரு. வீரசேகரா தெரிவித்தார்.

ரஷ்யாவில் செர்னோபில் அணு ஆலையில் ஏற்பட்ட கதிரியக்கக்கசிவு காரணமாக அப்பகுதியில் பலத்த பேரழிவு இடம்பெற்றது தெரிந்ததே. அப்பிரதேசத்தைச் சுற்றியுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தயாரிக்கப்படும் பால்மா வகைகளே மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கதிரியக்கப் பாதிப்புக்குள்ளான உணவு வகைகளை பாவிப்பதால் புற்றுநோய், தோல் வியாதிகள், மனநிலை பாதிப்படைதல் தலை மயிர் உதிர்தல் போன்றவை ஏற்பட முடியும் என்று வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (த-எ)

## இறந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு

புயலினால் தமிழ்நாட்டிலும் காரைக்காலிலும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 43 ஆக அதிகரித்தது.

## நெற் பயிர்களில் 'எரிபந்தம்' நோய்

யாழ்ப்பாணம், டிச. 6

தென்மராட்சிப் பகுதியில் உள்ள நெற்பயிர்களில் ''எரிபந்தம்'' என்ற நோய் வேகமாக பரவி வருகின்றது.

தற்போது பெய்யும் கடும் மழையினாலேயே இந்நோயின் தாக்கம் நெற்பயிர்களில் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நோய்க்கான அறிகுறியாக கண் போன்ற கபில நிறப் புள்ளிகள் நெற்பயிரில் காணப்படும்.

விவசாயிகள் இந்நோயை கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக பொட்டாஸ் அல்லது கசுமீன் அல்லது பென்லீற் அல்லது பிலாஸ்ரோஸ் போன்ற கிருமிநாசனிகளை பாவிக்குமாறும் மழையை தவிர்த்து சூரிய ஒளியில் மருந்துகளை தெளிக்குமாறும் யாழ். மாவட்ட விவசாய திணைக்களம் அறிவித்துள்ளது (இ-17)

## கடன் அடிப்படையில் கடற்றொழில் உபகரணம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடல்வள அபிவிருத்தி பகுதியினரால் தீவகம், காரைநகர், வலிகாமம் தென்மேற்கு, தென்மராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றியங்களைச் சேர்ந்த சங்கங்கள் தெரிவு செய்த சுமார் 35 கடற்றொழிலாளருக்கு கடந்த 23 ஆம் திகதி சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தில் வைத்து கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்ட இணைப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

ஒவ்வொரு கடற்றொழிலாளருக்கும் சுமார் 5000/- பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதன் பெறுமதி 20 மாதங்களில் மீளப் பெறப்பட்டு சுழற்சி முறையில் புதிய பயனாளிகளுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் மூலம் 1992, 1993 ஆம் ஆண்டுகளில் இதுவரை சுமார் 200 கடற்றொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## புலமைப்பரிசில் பரீட்சை மாற்றி அமைக்கப்படும்

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, டிச. 6

பரீட்சைத் திணைக்களத்தினால் தற்போது நடத்தப்பட்டு வரும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் லொக்குபண்டாரா கடந்த வியாழன் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

ஒரு தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர் இன்னொரு தேசிய பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு தற்போது இலவசமாக மதிய உணவு, சீருடை மற்றும் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு வரும் திட்டங்களை ஒருமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ-எ)

## இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாவிட்டால் அரசு பதவி விலக வேண்டும்

### சந்திரிகா குமாரணதுங்கா சொல்கிறார்

கொழும்பு, டிச. 6

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாவிடில் அரசாங்கம் பதவி விலக வேண்டும்.

மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க பாணந்துறையில் நடந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு அறைகூவல் விடுத்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசு அரசியல் தீர்வு காணவேண்டும். அப்படி முடியாவிடில் அரசாங்கம் ராஜினாமாச் செய்யவேண்டும் [illegible] வுள் பேரால் கேட்டுக் கொள்வதாகவும் அவர் [illegible].

பொருளாதாரக் கொள்கை:

## ஐ.தே.க. அமுல் செய்ததை சுதந்திரக் கட்சி மாற்றாது

### சிறிமாவோ உலக வங்கிக்கு உறுதி

கொழும்பு, டிச. 6

சுதந்திரக்கட்சி அடுத்த தேர்தலில் ஆட்சிக்கு வரும் பட்சத்தில் சமநிலைப்படுத்தப்பட்ட சந்தைப் பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் என்று உலக வங்கிக்கு உறுதிமொழி கூறப்பட்டுள்ளது.

உலக வங்கியின் தெற்காசியப்பிரிவு இயக்குநர் போல் இஸென்மன் சுதந்திரக்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்காவை அவரது ரோஸ்மீட் பிளேஸ் இல்லத்தில் சந்தித்து பேச்சு நடத்தினார்.

ஒரு மணித்தியாலம் வரை நீடித்த அச்சந்திப்பில் சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறிசேனநாயக்கா, பொருளாளர் கிங்ஸ்லி விக்கிரமரத்தினா மற்றும் மாத்தறை மாவட்ட எம். பி. மங்களசமரவீர ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய முக்கிய சேவைகளைப் பாதுகாத்துக் கொண்டு, சுதந்திரமாக புதிய தொழில்களை மேற்கொள்வதற்கு ஏதுவாக சமநிலைப்படுத்தப்பட்ட சந்தைப் பொருளாதாரக் கொள்கை அமுல் நடத்தப்படும் என்றும் சுதந்திரக் கட்சித் தலைவர் உலக வங்கிப் பிரதிநிதிக்கு உறுதியளித்துள்ளார்.

ஏற்கனவே தனியார் மயப்படுத்தப்பட்ட அரச நிறுவனங்கள் மீண்டும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படமாட்டா என்றும் சுதந்திரக் கட்சித் தலைவர்கள் உலக வங்கிக்கு உறுதியளித்துள்ளனர். (ஓ-எ)

மாவீரர் நாள் நிகழ்வுகள்:

## மக்களின் கருத்துக்களை அறிவிக்கக் கோரிக்கை

தமிழீழ மக்களின் தேசியத் திருநாளான மாவீரர்நாள் சம்பந்தமான எண்ணங்கள், கருத்துக்களை மாவீரர் பணிமனைக்கு நேரிலோ, எழுத்து மூலமோ தெரியப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குவிலில் உள்ள தமிழீழ மாவீரர் பணிமனை இது குறித்து மக்களுக்கு பிரசுரக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்தப் பிரசுர குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மாவீரர் நாளோ, மாவீரர் வாரமோ தமிழீழத்தின்தேசிய திருநாளாக ஆகிவிட்ட நிலையில், இந்தஆண்டுநடைபெற்று முடிந்த மாவீரர் வாரத்தின் நிகழ்வுகள் நிறைவானவையாக இருந்தனவா? அல்லது அவற்றில் ஏதாவது மாற்றங்கள் தேவையா? திருத்த வேண்டிய குறைபாடுகள், நீக்க வேண்டிய தவறுகள் இருந்தனவா? என்பவை பற்றி தமது எண்ணக்கிடக்கைகளை வெளிப்படுத்துவது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையும், உரிமையும் ஆகும்.

எனவே மாவீரர் வார நிகழ்வுகள் பற்றி, மாவீரர்களை, அவர்களது பெற்றோரை, மதித்துப் போற்றுவதற்கான நிகழ்ச்சிகள் பற்றி அதற்காகக் கடைப் பிடிக்கப்பட்ட ஒழுங்கு முறைகள்பற்றி தமக்குத் தோன்றிய, தோன்றுகின்ற எண்ணங்களை, கருத்துக்களை தமிழீழ மாவீரர் பணிமனைக்கு நேரிலோ, எழுத்து மூலமோ தெரியப்படுத்தி மாவீரர் வாரத்தை, மாவீரர் நாளை, முழு நிறைவான திருநாட்களாக நடத்துவதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழீழ மக்களை நாம் வேண்டி நிற்கிறோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## காயமுற்ற 56 பேர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாவாந்துறையைச் சேர்ந்தவர்.

★ அவுறான்பிள்ளை நீற்றம்மா (வயது 58) — மூன்றாம் குறுக்குத் தெரு.
★ அன்ரன் ராணி (வயது 35) — 3 ஆம் குறுக்குத் தெரு.
★ ஹில்லறி திரேசம்மா (வயது 33) — 3 ஆம் குறுக்குத் தெரு.
★ யோசெவ் இம்மானுவேல் (வயது 49) — சின்னக்கடை.
★ அருள்நாயகம் உஷாந்தன் (வயது 9)— சின்னக்கடை.
★ வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (வயது 63) — ஏழாலை கிழக்கு.
★ செபமாலை சிறில் (வயது 53) — சின்னக்கடை.
★ திரவியம் ரவீந்திரன் (வயது 30) — கஸ்தூரியார் வீதியைச் சேர்தவர் சின்னக்கடையில் வியாபாரம் செய்பவர்.
★ மனுவல்பிள்ளை அன்னம்மா (வயது 74)—பாஷையூர்.
★ ஆசீர்வாதம் ராணிதிரேஸா (வயது 43)— பீச் றோட்.
★ செல்வம் பற்றிக் (வயது 46)
★ சிந்தாந்துறை பெனடிக்ற் (வயது 50)—பற்றிக்ஸ் வீதி.
★ எஸ்பீரியல் ஜஸ்ட்சன் (வயது 3) — இச்சிறுவனின் தாயும் மற்றும் மூத்த சகோதரனும் தங்கையாரும் குண்டு வீச்சில் உயிரிழந்தனர்.
★ சிறிசேன திரேசம்மா (வயது 46) — பற்றிக்ஸ் வீதி.
★ அலெக்ஸாண்டர் அன்னம்மா (வயது 70) பற்றிக்ஸ் வீதி.
★ சிறில் கவுறின் (வயது 24) — பற்றிக்ஸ் வீதி.
★ துளசி ரவி (வயது 32) — பற்றிக்ஸ் வீதி. இவரின் ஒரு மகள் குண்டு வீச்சில் உயிரிழந்தார். மனைவியும் மற்றொரு பிள்ளையும் காயமுற்றனர்.
★ ரவி வனிதா (வயது 31) — மனைவி.
★ ரவி பிரதிபா (வயது 8) — மகள்.
மனுவல்பிள்ளை ஜெசநாதன் (வயது 51) — பற்றிக்ஸ் வீதி.
★ பாபு டிக்ஸன் (வயது 3) — பற்றிக்ஸ் வீதி.
★ வயித்தியாம்பிள்ளை லோறன்ஸ் (வயது 56) பற்றிக்ஸ் வீதி.
★ லோறன்ஸ் ஆனந்தம் (வயது 46) பற்றிக்ஸ் வீதி.
★ சிறில் மரிசலா (வயது 54) — இவரின் மூன்று மகள்மாரும் காயமுற்றனர்.
★ சிறில் மொறின் (வயது 24) —
★ சிறில் ஆன்லூமினா (வயது 22)
★ சிறில் விட்டறி (வயது 19) —
★ யேசுதாஸ் வேந்தன் (வயது 10) — பாஷையூர்.
★ தேவதாஸ் நீற்றம்மா (தங்கபுஷ்பம்) (வயது 4) — பாஷையூர்.
★ யோசெப் அனிதா (வயது 17) — பாஷையூர்.
★ கபிரியேல்பிள்ளை கியோமர் (வயது 45) — குண்டு வீச்சில் வலதுகால் முழங்காலுடன் துண்டிக்கப்பட்டுள்ளது. இவரது மகனும் குண்டுவீச்சில் காயமுற்றுள்ளான். பாஷையூரைச் சேர்ந்தவர்.
★ கியோமர் ரமணன் (வயது 9) — மகன்.
★ வஸ்தியாம்பிள்ளை ஜெயராணி (வயது 48)
★ ஞானசீலன் எழில்வதனி (வயது 07)
★ கபிரியேல் அமலதாஸ் (வயது 40) — கொழும்புத் துறை.
★ கிருபரெட்ணம் மான் திரேசம்மா (வயது 64) — இவரின் கணவர் குண்டுவீச்சில் உயிரிழந்துள்ளார்.
★ சிவசம்பு விஜயரங்கன் (வயது 35) — கொழும்புத் துறை.
★ அருளானந்தம் ஜெயமலர் (வயது 45) — பாஷையூர்.
★ அருளானந்தம் கியாணி (வயது 5)
★ குமாரசாமி ஆனந்தலிங்கம் (வயது 44)
★ சின்னப்பு இமானுவேல் (வயது 48)
★ கௌரி (வயது 24) — இராசாவின் தோட்டம்.
★ ஏ. மெலோக் (வயது 4) — சின்னக்கடை.
★ ஏ. அன்ரா (வயது 5) — சின்னக்கடை.
★ கீதா (வயது 47) — 2 ஆம் குறுக்குத்தெரு.
★ எஸ். ஸ்ரீபன் (வயது 33) — குருநகர்.
★ [illegible] — 2 ஆம் குறுக்குத்தெரு.
★ ஏ. வரப்பிரகாசம் (வயது 33) — திருநெல்வேலி.
★ [illegible] (வயது 22) — நாவற்குழி.

## ஐ. நா. அதிகாரி பார்வையிட்டார்

அண்மையில் சுப்பசொனிக் விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகிச் சேதமடைந்த கிளிநொச்சி ஆஸ்பத்திரியை ஐ. நா. அதிகாரி ஒருவர் கடந்த வியாழன் பார்வையிட்டார்.

கொழும்பில் இருந்து உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு அங்கு வந்த ஐ. நா. அபிவிருத்தித்திட்ட ஆலோசகர் திரு. மல்மட்றிட் அகத் என்பவரே ஆஸ்பத்திரி சேதங்களைப் பார்வையிட்டார். ஆஸ்பத்திரியின் தற்போதைய செயற்பாடுகள், குறைகள் பற்றியும் அவர் நேரில் கேட்டறிந்தார். (த-5)

## மலையக தமிழர்களுக்கு தேசிய அடையாள அட்டை

### உடன் வழங்க ஜனாதிபதி உத்தரவு

மலையகத்தில் உள்ள தமிழ்த் தோட்டத் தொழிலாளர் அனைவருக்கும் விரைவில் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கும்படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உத்தரவிட்டுள்ளார்.

தோட்டப் பகுதிகளில் ஊடுருவக் கூடிய தீவிரவாதிகளில் இருந்து உண்மையான தோட்டத் தொழிலாளர்களை வேறுபடுத்தி இனங்கண்டு கொள்வதற்கு வசதியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

தோட்டப்பகுதி தமிழ் மக்களுக்கு விரைவில் அடையாள அட்டைகளை வழங்குவதற்காக கண்டிக் கச்சேரியில் ஆட்பதிவு ஆணையாளரின் அலுவலகம் ஒன்று திறக்கப்படவுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்சமயம் அடையாள அட்டைகள் வழங்கப்படாமையினால் அவர்களும் பொலிஸாரும் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

விவசாயிகள் ஒய்வூதியம்;

## தவணை தவறியவர்களுக்கு 1994 டிச. வரை காலக்கெடு

யாழ்ப்பாணம், டிச. 6

விவசாயிகள் ஒய்வூதியத் திட்டத்தில் இணைந்தவர்களில் — தொடர்ச்சியாக 5 தவணைப் பணங்களை செலுத்தத் தவறிய யாழ். மாவட்ட விவசாயிகள் — 1994 டிசம்பர் 31க்கு முன் இதனைச் செலுத்தி இத்திட்டத்தில் மீண்டும் அங்கத்தவராகலாம்.

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை அளித்துள்ளது.

இத்திட்டத்தில் இணைந்த யாழ்.மாவட்ட விவசாயிகளில் பலர் 1990 ஜூனில் ஆரம்பிக்கப்பட்ட ராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து தமது விவசாய முயற்சிகளையும் கைவிட்டிருந்தனர். இதனால் தொடர்ச்சியாக 5 தவணைப் பணங்களையும் அவர்கள் செலுத்தவில்லை. தவணைப் பணம் செலுத்தாத விவசாயிகள் ஒய்வூதியத் திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டவர்களாக கருதப்பட்டனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட விவசாயக் குழுக்களின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைய அமைச்சரவை மேற்படி அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

இதேவேளை —

1988ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் இணைந்து கொண்ட 55 வயதிற்கு மேற்பட்ட விவசாயிகளும் தாம் செலுத்தாது விட்ட தவணைப் பணங்களை மீளச் செலுத்துவதன் மூலம் 1993 ஏப்ரல், ஒக்டோபர் மாதங்களில் இருந்து ஒய்வூதியத்தினை பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகின்றது. (த-162)

## சிரேஷ்ட அதிகாரிகளிடம் ஜெரி ஆலோசனை பெறுவார்

புதிய இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக யாழ். மாவட்டத்தில் உள்ள சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளிடம் ஆலோசனை பெறப் போவதாக வடபகுதி செயற்பாட்டு இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் ஜெரி டீ சில்வா தெரிவித்தார்.

'லங்காதீப' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இப்படியான ஆலோசனைகளை நடத்துவதற்காகத் தாம் அடுத்த வாரம் முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் செல்லவிருப்பதாகவும் அவர் கூறினார்.

## யாழ். நகரக்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது குண்டு குருநகர் மத்திய கிழக்கு, பற்றிக்ஸ் — றெக்கிளமேஷன் வீதியில் சென் றோக் சனசமூக நிலையத்துக்கு அண்மையில் விழுந்து வெடித்தது.

சின்னக்கடைப் பகுதியில் வெடித்த குண்டினால் அப்பகுதியில் பொருள்கள் வாங்க வந்த பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் உட்பட எண்மர் பலியாகினர்; முப்பது பேர் வரை காயமுற்றனர்; ஒரு பேக்கரி, மற்றும் 8 கடைகள் 8 வீடுகள் உட்பட பல கட்டடங்கள் சேதமாகின; சின்னக்கடையில் கால்நடைகள் பலவும் பலியாகின.

**செண். பற்றிக்ஸ் அருகில்**

றெக்கிளமேசன் சனசமூக நிலையத்துக்கு அருகில் விழுந்த குண்டினால் கர்ப்பிணித் தாய் ஒருவர்' அவரின் இரண்டு பிள்ளைகள் மற்றும் மூன்று சிறுவர்கள் என மொத்தம் ஆறு பேர் உயிரிழந்தனர்; 13 பேர் காயமடைந்தனர்; 3 வீடுகள் முற்றாக சேதமடைந்தன; மேலும் 7 வீடுகள் பலத்த சேதமுற்றன.

**பாஷையூரில்**

மீண்டும் காலை 10.20 மணிக்கு வந்த இரு பொம்மர்கள் பாஷையூர்ப் பகுதியில் நான்கு குண்டுகளை வீசின. முதலில் வீசிய இரு குண்டுகளும் கடற்கரையில் விழுந்து வெடித்தன.

மற்றைய இரு குண்டுகளும் பஷையூர் பீச் வீதியில் உள்ள குடியிருப்புகள் மீது விழுந்து வெடித்தன. இதனால் வயோதிபர் ஒருவரும் மற்றொரு பெண்ணும் பலியாகினர்; 15 பேர் வரை படுகாயமடைந்தனர்.

இக்குண்டு வீச்சால் இரு வீடுகள் முற்றாகச் சேதமாகின; அருகில் இருந்த திருச்சிலுவைக் கன்னியர் மடம், முதியோர் இல்லம், குருத்துவக் கல்லூரி மற்றும் பல வீடுகள் சேதமடைந்தன.

**கர்ப்பவதிக்கு கருச்சிதைவு**

இக்குண்டு வீச்சின் போது அப்பகுதியில் இருந்த — 19 வயதுடைய — இளம் கர்ப்பவதி ஒருவர் கருச்சிதைவுக்கு உள்ளானார்.

இதற்கிடையில் —

காலையில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சினால் அதிர்ச்சியுற்று — அத்தியடியைச் சேர்ந்த — வில்லியம் ஜெயராஜசிங்கம் (வயது 66) என்பவர் மரணமானார்.

**வேறு இடங்களில் தஞ்சம்**

நேற்று இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சை அடுத்து குருநகர், சின்னக்கடை, பாஷையூர் பகுதிகள் வெறிசோடிக் காணப்பட்டன. விமானக் குண்டு வீச்சு அதிர்ச்சியில் சிக்கிய மக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடி வேறு இடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

கரையோரப் பகுதியில் தொடர்ந்து தங்கியிருந்த மக்கள் மத்தியில் பதற்றம் காணப்பட்டது.

(உ-3-5-15-17-51-162)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### மருதப்பா பாலசிங்கம்
(இளைப்பாறிய P.W.D ஓவசியர்)

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கண்டிக்குளியை வசிப்பிடமமாகக் கொண்டவருமான இளைப்பாறிய P.W.D. ஓவிசியர் மருதப்பா பாலசிங்கம் அவர்கள் நேற்று (5-12-93) காலமானார்.

அன்னார் சிவஞானசுந்தரியின் (மணி) அன்புக் கணவரும், திருமதி கிருஷாந்தி - ஜீவராஜன், திருமதி குஷாந்தி - துஷயந்தன், செல்வி பிருஷாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜீவராஜன் (கொழும்பு A.P.A.T. உரிமையாளர்), துஷ்யந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவராசா, இரட்னேஸ்வரி, குணநேசன் (கனடா), காலஞ்சென்ற திருமதி லில்லிமலர், திருமதி அல்லிமலர், புனிதவதி, யோகநாதன் (புத்தளப்), பத்மநாதன் (ஆசிரியர், அருணோதயாக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. மகேந்திரம், திருமதி பத்மாவதி குணநேசன், திரு. இராசா சுப்பிரமணியம், காலஞ்சென்ற தெய்வேந்திரன், திருமதி கௌரி - பத்மநாதன் திரு. தியாகலிங்கம் - மாலினி, திருமதி சிவகாமசுந்தரி பாலச்சந்திரன், திருமதி சிவயோகசுந்தரி - ஆவாலசுந்தரம், திரு. ஸ்ரீ காந்தன் - மொனிக்கா, திரு. ஸ்ரீ கரன் - நீலா, திரு சாந்தகுமார் - ஜெயராணி ஆகியோரின் மைத்துனரும், நிர்த்திகாவின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் மரணச் சடங்குகள் அவரது இல்லத்தில் இன்று (6-12-93) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, மக்கள்.

75, கண்டி றோட்,
கண்டிக்குளி. (28307)

### திருமதி நாகமுத்து பொன்னம்மா

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த பொன்னம்மா காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்பு மனைவியும், யோகம்மா, சிவயோகம், காலஞ்சென்ற செலம்மா, செல்வரத்தினம், பரமேஸ்வரி, இராசம்மா, காலஞ்சென்ற சாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகநாதன், வேலாயுதம், மணியம், தம்பு, காலஞ்சென்ற சுப்பிரமணியம், தளையசிங்கம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை மட்டுவில் தெற்கிலுள்ள தம்புவின் இல்லத்தில் நடைபெற்று நேற்று (5 - 12 - 93) பி.ப. 4 மணிக்கு பூதவுடல் உணாவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சி. தம்பு
(மருமகன்)

மட்டுவில் தெற்கு.
(28302)

### V. K. MANN

விக்ரர் கிருபைரட்ணம் மேன் (MANN) (இளைப்பாறிய நீர்ப்பாசன தொழில்நுட்ப உத்தியோகத்தர்) 05-12-1993 இல் அகால மரணமானார்.

அன்னார் திரேசம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், ரொனிடங்கன் (ஜெர்மனி), கிறிஸ்ரி, ஜெயறஞ்சினி, சாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06 - 12 - 1993) காலை 9 மணிக்கு 50, கடற்கரை வீதி, பாஷையூர் அவரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துக்காக கொஞ்செஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவாய் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சாந்தினி (மகள்)
மு. அ. ஜெயராஜ் (மைத்துனர்)
(உள்ளூராட்சி திணைக்களம் யாழ்ப்பாணம்)

இல. 50, கடற்கரை வீதி,
பாஷையூர். (38312)

### திருமதி குமாரசாமி காமாட்சி

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாக கொண்டவரும், வவுனிக்குளம், தற்பொழுது யாழ்ப்பாணம் நல்லூர் 29/4 C மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதிகுமாரசாமி காமாட்சி 05 12-1993 அன்று காலமானார்.

இவர் கந்தையா குமாரசாமியின் அன்பு மனைவியும் காலம் சென்ற கனகசபாவதி கற்பகம் தம்பதிகளின் மகளும், காலம் சென்ற அனுமார் கந்தையா அபிராமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், நவரட்ணசிங்கம் (கந்தசாமி), காலம் சென்ற பாலசிங்கம் சரஸ்வதி, வசந்தகுமாரி, ரட்ணசிங்கம் (கொழும்பு), நாகேஸ்வரி (கனடா), தனபாலசிங்கம் (சுவிஸ்), புஸ்பவதி (கனடா), சாந்தகுமாரி (சுவிஸ்), மகேந்திரன் (சுவிஸ்), வனிதாம்பாள் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்னலட்சுமி, நடராசா (உமா றேடிங் கம்பனி கொழும்பு), சுந்தரலிங்கம் (அக்கராயன் றேடிங் சென்ரர் ஸ்கந்தபுரம்), உஷாகாந்தி, மகாலிங்கம் (கனடா), வனஜா (சுவிஸ்), கோணேஸ் (கனடா), பாமேஸ்வரராஜன் (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கனகசிங்கம் (டிக்கோயா), லெட்சுமி (மாவிட்டபுரம்), காலம் சென்ற சற்குணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வே. க. சோமசுந்தரம் (ஜே.பி), காலம் சென்ற சண்முகநாதியம்மா (மலேசியா), நல்லதம்பி (கனடா), சின்னம்மா, வே. க. சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாஸ்கரன், நளாயினி, கிருபாயினி, சண்முகாயினி, நகிந்தன், நவீதரன், தமயந்தி, நரேஸ்சன், அனுஷா, சுபாயினி, மயூரன், மதுரா, ராகுலன், பிரசன்னா, பிரதீபா, காயித்திரி, கீர்த்தனா, நிரோஷா, நிரோஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
கு. நவரட்ணசிங்கம்
(கந்தசாமி)
(மகன்)

29/4 C மருதடி வீதி,
நல்லூர். (28305)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 198/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06-12-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கோடியை வைத்திருங்கள்; கொடியைத் தாருங்கள்!

## கலைஞரிடம் வை. கோ. கோரிக்கை

சென்னை, டிச. 6

கோடியை நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள். கொடியை மட்டும் எம்மிடம் தந்து விடுங்கள்.

வை. கோபாலசாமி, தி. மு. க. தலைவர் கருணாநிதிக்கு இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தமது தொண்டர் ஒருவர் தீக்குளித்து மாண்டதற்கு இரங்கல் தெரிவித்து நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தி. மு. கவின் ஒற்றுமைக்கு அதன் தலைமை வைத்துள்ள தீ இப்போது பரவி வருகின்றது. தி. மு. கவைக் காப்பாற்ற எனது தொண்டர்கள் திடசித்தம் கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

தி. மு. கவிடம் உள்ள சொத்துகள் எமக்கு வேண்டாம். அதன் லட்சியம், கொடியைக் காப்பாற்றவே நாம் முனைந்துள்ளோம். சொத்துகளை கருணாநிதி வைத்துக் கொள்ளட்டும். ''கோடியை அவர் வைத்துக் கொள்ளட்டும். கொடியை மட்டும் எம்மிடம் தாருங்கள்'' என்றும் கோபாலசாமி கேட்டுக் கொண்டார். (த-எ)

## காயமுற்ற படையினர் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், டிச. 6

பூநகரி இராணுவ, கடற்படைக் கூட்டுத்தளம்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் தொடர்பான தகவல்களைத் திரட்டும் பணியில் அரசு தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவரும் படையினர் அங்கு வைத்து தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவதாகவும் —

அவர்களிடமிருந்து விவரங்கள் பெறப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களினால் நடத்தப்படும் சிறுவர் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான கல்விக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை முதல் தொடர்ந்து இருபது நாட்கள் நடைபெறும். (த-152)

★ ★ ★

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும், கல்வி மேம்பாட்டுப் பிரிவும் இணைந்து நடத்தும் பண்டிதர் வகுப்புகள் இன்று திங்கள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் மீண்டும் ஆரம்பமாகும்.

பால பண்டிதர், பண்டிதர் வகுப்புகளில் கற்கும் மாணவர்களை இன்று பிற்பகல் 5 மணிக்கு மேற்படி பாடசாலையில் சமுகமளிக்கும்படி இணைப்பாளர் அறிவித்துள்ளார். [த]

★ ★ ★

நிதர்சனம் நிறுவனத்தால் மாதாந்தம் வெளியிடப்படும் ''ஒளிவீச்சு'' வீடியோ சஞ்சிகை தொடரின் ஒக்டோபர் மாதத்துக்கான வெளியீடு இன்று பிற்பகல் 5 மணிக்கு யாழ். கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படவுள்ளது.

இம்முறை அகன்ற திரையில் காண்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கல்வி டிப்ளோமா விரிவுரைகள்

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கல்வி நெறியை யாழ். இந்துக் கல்லூரி நிலையத்தில் பயிலும் இரண்டாம் வருட மாணவர்களுக்கான செயலமர்வுகள் எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும் என சிரேஷ்ட விரிவுரையாளர் அறிவித்துள்ளார். (உ-3)

## பண்டிகைகளுக்காக கூடுதல் உணவு

நத்தார், புதுவருட பண்டிகைக் காலங்களை முன்னிட்டு யாழ் மாவட்டத்துக்குக் கூடுதலான உணவுப் பொருள்களை கப்பல் மூலம் அனுப்புவது தொடர்பாக யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பில் புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகிறார்.

கடந்த ஒரு மாதகாலமாக கப்பல்கள் மூலம் உணவுப் பொருள்கள் அனுப்பப்படவில்லை.

அரிசி, பருப்பு, பால்மா வகைகளை கப்பலில் அனுப்புவது தொடர்பாக அவர் பேச்சுக்கள் நடத்தி வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

குண்டு வீச்சால் யாழ். செயலகத்துக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்திய அரச அதிபர் செயலக கட்டடங்களை திருத்த சிமெந்து, சீற் வகைகளை கப்பல் மூலம் எடுத்து வருவது தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

அரசு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாம் பார்த்தபோது குருத்துவக் கல்லூரிக்கு மிகச் சமீபமாகவும், திருச் சிலுவைக் கன்னியர் மடத்துக்கு அருகிலும் குண்டுகள் விழுந்து வெடித்து பலத்த சேதத்தை ஏற்படுத்தியிருந்தன என்றும்-

குருத்துவக் கல்லூரியின் ஓடுகளும் கண்ணாடிகளும் நொருங்கியிருந்தன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-5)

## தளபதியை மாற்றுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

இராணுவத்திலும் பார்க்க அளவில் எவ்வளவோ சிறிதான — ஆனால் தீவிர இலட்சியம் கொண்ட — கெரில்லாக் குழுவுக்கு எதிரான போரில் சரியான இலக்கு இன்றி இயங்கும் இராணுவம் என்றதோர் வடிவையும் இராணுவம் வலுப்படுத்தியது.

*மீண்டும் முறுகல் வரும்*

மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவுக்கும் அவரது துணை தலைமை நிர்வாக அதிகாரியானவருக்கும் இடையே உறவு நிலை சரியானதாக இல்லாமல் இருக்கக் கூடும்.

ஆதலால் எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள் ஏற்பட்ட பின்னரும் இராணுவத்துக்குள் முறுகல் நிலை நிலவலாம் என்பதை இராணுவத் தரப்பினர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதற்கிடையில் போர் முனையில் இராணுவம் தீவிரப் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் மையப் பகுதியானவடக்கில் — எவ்வித எச்சரிக்கையும் இன்றி அடிக்கக் கூடிய ஒரு எதிரிக்கு முன்னால் — பல இராணுவ முகாம்கள் தாக்குதலுக்குள்ளாகக் கூடிய நிலையில் உள்ளது.

இராணுவத்தின் இப்போதைய கொள்கை, பல இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் நடத்துவதை சாத்தியமாக்கியுள்ளது என்று இராணுவப் பகுப்பாய்வாளர்கள் கூறுகின்றனர்.

வடமேற்கில் உள்ள இராணுவத் தளபதிகள் மன்னாரில் ஏற்கனவே தமது இராணுவ நடவடிக்கைகளை படிப்படியாகக் குறைத்துள்ளனர்.

*பலாலியில் தாக்குதல்*

யாழ் குடாநாட்டில் உள்ள பலாலி இராணுவ தளம் பற்றியும், விமானத் தளம் பற்றியும் முரணான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

அண்மையில் விடுதலைப் புலிகள் சிலர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இந் நிலைகளுக்குள் ஊடுருவ முடிந்தது.

பலாலி அழிக்கப்பட்டால் அது பாதுகாப்புப்படையினரின் வான்வழி வளத்தையும் அழித்து விடும் என்பதால் மீண்டும் அவர்கள் முயற்சிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

படையினர் குறைந்த வசதிகளுடன் போரில் தமது இலக்கு என்ன, குறிக்கோள் என்ன என்பது தெரியாமல் பரவலாக சிதறியுள்ளவர் என்பது இராணுவ நிபுணர் ஒருவரின் கருத்தாகும்.

இதற்கு அரசே பொறுப்பு என்று பத்திரிகைகளுடன், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

*பாதுகாப்பு அமைச்சர்*

பாதுகாப்புத்துணை அமைச்சர் ஒருவரை நியமிப்பதே பலமான பாதுகாப்புப்படையை உருவாக்குவதற்கான முதல் நடவடிக்கை என்று பல இராணுவ அதிகாரிகள் கருதுகின்றனர்.

சங்கடங்கள் மலிந்த — அரசியல் ரீதியில் ஆபத்தாக இருக்கக் கூடிய — பதவி இது.

இப்பதவிக்கு போட்டா போட்டி இல்லாதிருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

விடுதலைப் புலிகள் சமாதான பேச்சுவார்த்தைக்கு வருவதற்காக அவர்களுக்கு நெருக்கடி கொடுக்கப்பட வேண்டும் என பாதுகாப்பு படையினர் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் அப்படிப்பட்ட பேச்சுவார்த்தைக்கு முன் வைக்கக் கூடிய அரசியல் திட்டம் ஒன்று வேண்டும் என்றும் படையினர் தனிப்பட்ட முறையில் வாதாடுகின்றனர்.

*குழப்பம் நிறைந்தது*

இலங்கையில் இனப் பிரச்சினை இல்லை என ஜனாதிபதி கூறிவருவது இவ் விஷயத்தை மேலும் குழப்பியுள்ளது.

திரு. பிரபாகரனுக்கும் அவரது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எதிராக நடக்கும் போருக்கு முடிவு காண்பதற்குத் தேவையான, அவசியமான பெரும் அடியைக் கொடுக்கும் நிலையில் இராணுவம் இப்போது இல்லை என்பதையே இராணுவத் தளபதி பதவியில் இருந்து சிசில் வைத்தியரத்னா விலகுவது எடுத்துக்காட்டுகிறது.

இப்பத்தாண்டு காலப் போரின் துரதிர்ஷ்டங்களுக்கு இராணுவத் திறமையின்மை, வசதிக்குறைவுகள் மற்றும் அரசியல் உறுதியின்மை ஆகியனய காரணங்கள் எனக்கருதப்படுகிறது.

தளபதி சிசிலை மாற்றுவதன்மூலம் இந்தக்குறைகள் அனைத்திற்கும் தீர்வு ஏற்படுமா என்பதும் சந்தேகம் தான்'' — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## புலிகள் பலாலிக்குள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புகுந்து தாக்கியதில், அதிகாரிகள் உட்பட இராணுவத்தினர் 17 பேர் கொல்லப்பட்டனர். அவர்களது சடலங்கள் இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டதை நாம் கண்டோம். ஆனால் அந்த தாக்குதலில் 9 பேர் மட்டுமே இறந்ததாக அறிவிக்கப்பட்டதாக இங்கே வந்த பின்னரே அறிந்தோம்.

பலாலி முகாமுக்குள்ளேயே வந்து புலிகள் தாக்கியதால் சிப்பாய்கள் மனம் குலைந்துள்ளனர். இராணுவத்தினர் ஒவ்வொரு இரவையும் மரணப் பயத்துடனேயே கழிக்கின்றனர்.

முன்னிலை காப்பரண்களில் உள்ள இராணுவத்தினர் தவிர ஏனைய அனைவரும் பலாலி இராணுவ தலைமையக கட்டிடத்தினுள் ஒன்று கூடி தாழ்வாரங்களிலும், மரங்களின் கீழும், அலுவலக விறாந்தைகளிலுமே இரவுப் பொழுதை கழிக்கிறார்கள்.

பூநகரித் தாக்குதல்போல பலாலி மீதும் பெரும் அதிரடித் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தக்கூடும் என்று அஞ்சிய வண்ணமே உள்ளனர்.

பூநகரி இராணுவ முகாமில் 2 ஆயிரத்து 400 படையினர் இருந்தனர் என்றும் சுமார் ஆயிரத்து 200 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்றும், 500 பேர் வரை விடுதலைப் புலிகளின் பிடியில் சிக்கியிருக்கக்கூடும் என்றும இராணுவத்தினர் தமது சகாக்களுடன் உரையாடினர்.

பூநகரித் தாக்குதலின் பின் இராணுவத்தினர் கதிகலங்கிப் போயிருந்தனர் இராணுவத்தின் முன்னணி காவலரண்களில் உள்ள இராணுவத்தினர் தவிர ஏனைய இராணுவ பொலீஸார், கவச வாகனப் பிரிவினர், பயிர்ச் செய்கைப் பிரிவினர், பயிற்சிப்பிரிவினர், தொழில்நுட்பவியலாளர்கள், சிங்கள சிவில் உத்தியோகத்தர்கள் உட்பட சகலரும் இரவில் ஒரே இடத்தில் கூடி இரவுப் பொழுதை கழிக்கின்றனர்.

எம்மையும் தடுப்பு முகாமில் இருந்து மாலை 6 மணியளவில் கொண்டு சென்று இராணுவ ''கன்ரீன்'' பகுதியில் கை விலங்குடன் அடைத்து விட்டு தாமும் எம்மைச் சுற்றிப் படுத்துக் கொள்வார்கள் — என்றார். [அ 9]

## இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலிகள்

எமது கழக முன்னாள் லயன்ஸ் ஆலோசகரும், முன்னாள் லயன்ஸ் கழகத் தலைவரும், தற்போதைய மாவட்ட லியோ கழகங்களின் தலைவரும், பிரபல சமூக சேவையாளருமான

அமரர் உயர்திரு

### லயன் L. றேமன் முத்தையா

அவர்களின்

மறைவினால் நாம் அதிர்ச்சியடைகின்றோம். இவர் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது கழகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

"லியோ கழகம்"
கண்டிக்குளி மகளிர் கல்லூரி

[28303]

## மரண அறிவித்தல்கள்

### சுந்தரம் நன்னிப்பிள்ளை

மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்ட நன்னிப்பிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற மயில்வாகனம் சுந்தரத்தின் அன்பு மனைவியும், பொ. கோவிந்தரின் (மூளாய்) சகோதரியும், குமாரசாமி, சிவநேசன் (A. K. S. நகை மாளிகை), கந்தசாமி (கனடா), விசாலாட்சி, பரமேஸ்வரி, வன்னியசிங்கம் (முன்னாள் வித்தனைத் திணைக்களச் சிறாப்பர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மாம்பிகை, புவனேஸ்வரி, அமரகுலேஸ்வரி, அம்பலவாணர் (ரயில்வே திணைக்களம்), இராசரத்தினம் (S.R, புன்னாலைக்கட்டுவன்), புஸ்பலீலாவதி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6-12-93) நண்பகல் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம் புலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சு. வன்னியசிங்கம்
(மகன்)

''கொட்டாவத்தை''
கல்வளை,
சண்டிலிப்பாய். (28314)

### திருமதி கணபதிப்பிள்ளை கனகம்மா

கலட்டி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த காலம் சென்ற தில்லையம்பலம், நாகமுத்து ஆகியோரின் மூத்த மகளும் காலம்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியுமான திருமதி கனகம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்ற பாலசுப்பிரமணியம், குணசிங்கம், மகேஸ்வரி, திருஞானசெல்வம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், வள்ளிநாயகி, குலசிந்தாமணி, காலம்சென்ற குலசிங்கம், பத்மாவதி ஆகியோரின் மாமியாரும், விசாலாட்சி, மீனாட்சி, நாகரெத்தினம் ஆகியோரின் சகோதரியும், வைத்திலிங்கம், காலம்சென்ற செல்லத்துரை, அழகரெத்தினம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 6 - 12 - 93 திங்கட்கிழமை பகல் 12 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
க குணசிங்கம் (மகன்)
இ கிருஷ்ணானந்தன் (வேலணை)

43/3, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (28306)

### சின்னப்பு திருநாவுக்கரசு

சண்டிலிப்பாயைச் சேர்ந்த [மத்தி] சின்னப்பு திருநாவுக்கரசு 3 - 12 - 93 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், திருமதி குமுதினி [M. P. C. S. மானிப்பாய்], சுமதினி [நோர்வே], உமாசுதன் [ஜேர்மனி], உமாகரன் [ஜேர்மனி], குணாசுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குலேந்திரன், சிவனேசராஜா, சர்மா [கொழும்பு], ஆகியோரின் மாமனாரும், கிரிஷாந், பிரஷாந், சிந்துஜா, டிலோசன் (நோர்வே) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பி. ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

சண்டிலிப்பாய் மத்தி.
சண்டிலிப்பாய். [28311]

### கந்தையா விக்னேஸ்வரன் (விக்கிஸ்)

(றியோ கபே)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், வேலணை 5 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்ட 49, முருகேசர் வீதி, நல்லூரில் வசித்தவருமாகிய கந்தையா விக்னேஸ்வரன் 05-12-1993 இல் அகால மரணமானார்.

அன்னார் மீனலோசனியின் அன்புக் கணவரும், காயத்திரி, ஆரணி ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தையா - இலட்சுமியின் அன்பு மகனும், பரமேஸ்வரன், சரோஜினி, இராசேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நா. பாலசிங்கம், கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற அம்பலவாணர் - மரகதத்தின் அன்பு மருமகனும், ரகுநாதனின் (அக்குறஸ்ஸ) சகலனும், யோகேஸ்வரி பேரின்பநாதன், உருத்திரபதி, தயானந்தன், விபுலானந்தன் (பேராதனை பல்கலைக் கழகம்) ஆகியோரின் மைத்துனரும், தேவிகா - பேரின்பநாதனின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (05 - 12 - 1993) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
மனைவி

49, முருகேசர் வீதி,
முத்திரைச் சந்தை,
நல்லூர். (28313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org